1971 ஜூலை 24]

Deep Sea Fishing in Tamil Nadu

*423 Q.—Thiru B. VENKATASAMY: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state:

(a) whether there is any proposal to start Deep Sea Fishing in the coastal areas of the State; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) & (இ) தொலைகடல் பகுதியில் ஆழ்கடல் மீன்பிடி திட்டத்தைத் தொடங்கும் செயற்குறிப்பு ஒன்று உள்ளது. ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்குப் பெரிய படகுகள் தேவைப்படுகின்றன. 57 அடி உருக்கு நாவாய்கள் நான்கிற்கான தருவிப்பு ஆணைகள் அனுப்பப்பட்டுள்ளன. அவை கல்கத்தாவில் கட்டப்பட்டு வருகின்றன. அவை மாநிலத்திடம் அடுத்த சில திங்கள்களில் ஒப்படைக்கப்படுமென எதிர்பார்க்கப்படு கிறது. அந்த நாவாய்கள் கிடைக்கப் பெற்றவுடன் தொலைகடல் பகுதியில் உள்ள மீன்பிடி பகுதிகளை வரையறுப்பதற்காகவும் தனியார் நிறுவனங்களுக்குச் சொந்தமான ஏனைய நாவாய்கள் அந்தப் பகுதிகளில் மீன்பிடிக்க வகை செய்வதற்காகவும் முன்னோடி ஆய்வு நடத்த அவற்றைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

Thiru B. VENKATASWAMY: Sir, fish is a vitaminised food and there is a great chance of increasing production of fish from the coastal areas of Tamil Nadu. Yesterday the Hon. Minister had stated that there was some delay on the part of the Central Government with regard to making a survey. So, may I know whether any concrete steps have been taken by this Government to survey the entire coastal areas of our State?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, அதற்காகத்தான் இந்த நான்கு நாவாய்கள் வந்து, நல்ல முறையில் சர்வே செய்ய வழி செய்யப்பட்டிருக்கிறது. தனியார் துறையில் லாஞ்ச் மூலமாக ஆழ்கடலில் சென்று மீன் பிடிப்பதற் காகவும், எந்தெந்த இடங்களில் மீன் கிடைக்கிறது என்பதைக் கண்டறியவும் "இன்டோ-ஐஸ்லெண்டு ஃபிஷெரிஸ்" நிறுவனம் மூல மாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இன்டோ-அமெரிக்கன் ஃபிஷெரிஸ் நிறுவனம், மெஸர்ஸ் பின்னி அண்டு கம்பெனிக்காரர்கள் அமெரிக்காவிலிருந்து பெரிய டிராலர்ஸ் வரவழைக்கிறார்கள். ஆழ்கடலுக்குச் சென்று, நீண்டநாள் தங்கி, மீன் பிடித்து, மீன்களைப் பக்குவப்படுத்தி, அங்கேயே டப்பாக்களில் அடைத்து வைப்பதற் கான திட்டங்கள் செய்யப்படும். இந்தத் திட்டங்கள் குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகளில் நிறைவேற்றி வைக்கப்படும்.

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டி லுள்ள மீனவர்கள் ஆழ்கடலில் சென்று மீன்பிடிக்கும்போது, அவர் களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் கேரளத்தாரும், ஜப்பான் மீனவர்களும் மிகப் பெரிய டிராலர் வைத்துக்கொண்டு மீன்பிடிப்ப தால், இரு சாராருக்குமிடையே கலகம் நடக்கிறது, சச்சரவுகள் உண்டாகின்றன. ஆகவே, கேரள அரசிடமும், ஜப்பான் அரசிடமும் இதுகுறித்து ஏதாவது நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுத்திருக் கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, நேற்றுகூட இந்த மானியத்தின்மீது பேசும்போது கேரளத்தார் என்று சொன்னார்கள். கேரளத்தார் யாரும் ஆழ் கடலில் மீன்பிடிப்பதற்காகச் சென்று தமிழ்நாட்டு மீனவர்களுக்கும் அவர்களுக்கும் தகராறு ஏற்பட்டது என்ற தகவல் எங்களுக்குச் சரி யாகத் தெரியவில்லை. கேரளத்தார் எல்லோரும் நமது மாநிலத்தில் இருப்பவர்கள்தாம். ஆழ்கடலில் மீன்பிடிக்கும் திட்டத்தை நிறை வேற்றும்போது நமது மீனவர்களுக்கு எந்தப் பாதகமும் ஏற்படாத வண்ணம் அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும்.

திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, ஆழ்கடலில் மீன் பிடிக்கும் திட்டம் நிறைவேற்றப்படுமானால், இதன்மூலம் அந்நிய நாடுகளுக்கு நம்முடைய நாட்டிலே கிடைக்கின்ற மீன்கள் ஏற்றுமதி செய்யப்படுமா? அப்படியானால் எவ்வளவு ஏற்றுமதி செய்யப்படும்? எவ்வளவு அந்நியச் செலாவணி கிடைக்கும் என்பதற்கான செயற் குறிப்பு ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, அந்நிய நாடுகளுக்கு மீன்களை ஏற்றுமதி செய்வதற்காகத் தான் இந்தத் திட்டம். இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் போதுதான் சரியான குறிப்பு சொல்ல முடியும்.

Fish Canning Industry in Tamil Nadu.

*424 *Q.*—THIRU A. SWAMIDHAS: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state:

(*a*) whether there are proposals under the consideration of the Government to start a Fish Canning Industry in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, தூத்துக்குடி யிலே இம்மாதிரி "ஃபிஷ் கானிங் யூனிட்" ஒன்று அமைக்கப்பட்டு லாபகரமாக நடந்துகொண்டு வந்ததை, இரண்டு ஆண்டுக்காலமாக தனியாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதே, அதை மீண்டும் அரசே ஏற்று நடத்துமா? இல்லையென்றால் காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, அதில் நஷ்டம் ஏற்பட்டதற்காகத்தான் தனியாருக்குக் கொடுக்கப்பட்டது. தனியார் துறையிலாவது நல்ல முறையில் நடக்கும் என்பதற்காக முதலிலே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. முதலில் அவர்கள் எடுத்த குத்தகை 5,290 ரூபாய். "ஃபிஷ் மீல்" உற்பத்தி செய்வதற்காக மாதம் ஒன்றுக்கு 500 ரூபாய் அளவிற்குக் கொடுக்கப்பட்டது. அவர்களும் மூலப்பொருள்கள் சரியாகக் கிடைக்கவில்லையென்றும், நஷ்டம் ஏற்படுகிறது என்றும் சொல்லி, படிப்படியே அவர்கள் கொடுத்த குத்தகைத் தொகையை குறைத்துக் கொண்டு வந்தும், கடைசி வரையில் அதை லாபகரமாக நடத்த முடியவில்லை. அதற்காகத்தான் அரசே மீண்டும் எடுத்துக்கொள்வது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது.